# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ      அதிவிசேஷமானது

අංක 1791/41 - 2013 ජනවාරි 04 වැනි සිකුරාදා - 2013.01.04

***1791/41 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், சல்பிட்டி கோரளை, சிறு பிரிவில், தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரால் தயாரிக்கப் பட்டுள்ள சீஓ/கேஎஸ்பீ/12/07 மற்றும் 2012.03.09 ஆந் திகதிய, உத்தேச பிரதிகளில், குறிப்பிடப்பட்ட துண்டு "ஏ"எனக் குறிப்பிடப்பட்ட 4.9954 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணம் கொண்ட கீழ்க் குறிப்பிடப்படும் பெயர்களில், விஸ்தீரணங்களில் அமைந்துள்ள காணித் துண்டின் விபரம் :

01. **துண்டு "ஏ" - கரதியான வயல் அல்லது கடோல வயல் காணி - விஸ்தீரணம் : சுமார் 4.9954 ஹெக்டயார்ஸ்**

வடக்கு : உரிமை கோருபவர் தெரியாத கரதியான வயல் அல்லது கடோல் வயல் ; கிழக்கு : உரிமை கோருபவர் தெரியாத கரதியான வயல் அல்லது கடோல் வயல் மற்றும் பெரிய கால்வாய் ; தெற்கு : அடிப்படை வரைவு இல. கொ. 8949 இல் இல. 2 மற்றும் பெரிய கால்வாய் ; மேற்கு : அடிப்படை வரைவு இல. கொ. 8949 இல் இல. 1, 2 மற்றும் உரிமை கோருபவர் தெரியாத கரதியான வயல் அல்லது கடோல் வயல்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/8/2011/பீசீ/308.
"மிஹிகத மெதுர", காணிச் செயலாளர் காரியாலயம்,
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2012.11.20.

01-550

---

### திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

எனது இல. : மெது/3/1/2/71/21.
காணி, காணி அமைச்சின் குறிப்பு இல. : 03ஜே/95/எப்ஆர்/499.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2001.09.25 ஆந் திகதிய 1203/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட மேற்சொன்ன அறிவித்தலில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல. 03/005/95/எப்ஆர்/499 எனக் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், இது 03ஜே/95/எப்ஆர்/499 எனத் திருத்தப்பட்டு சரி செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

பிரதேச செயலாளர்,
மெதகும்பரை.

பிரதேச செயலகம்,
மெதகும்பரை,
2012.12.24.

01-551

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.